செ.வெ.எண்: 36 நாள்: 13.11.2021

**விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஊராட்சி ஒன்றியம் சிங்கவரம் ஊராட்சியில் இரண்டு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மற்றும் மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியத்தில் புதியதாக ஊராட்சி ஒன்றிய அலுவலகம் கட்டடம் கட்டும் பணியினை மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.**

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஊராட்சி ஒன்றியம் சிங்கவரம் ஊராட்சியில் ஊரக பொதுநிதி 2021 – 2022-ன்கீழ் ரூ.25.47 இலட்சம் மற்றும் மாவட்ட ஊராட்சி குழு 2021 - 2022 நிதியின் கீழ் ரூ.26.00 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டும் பணியினை மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள் இன்று (13.11.2021) அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.

தொடர்ந்து செஞ்சி வட்டாட்சியர் அலுவலகத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பாக வடகிழக்கு பருவமழையினால் ஏற்படும் காய்ச்சல் மற்றும் தொற்றுநோயினை தடுக்கும் பொருட்டு சிறப்பு நடமாடும் மருத்துவ முகாம் வாகனங்களை மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

முன்னதாக செஞ்சி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சிட்டாம்பூண்டி ஊராட்சியில் புதியதாக அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமையவுள்ள இடத்தினை தேர்வு செய்யும் பொருட்டும், பொன்பத்தி ஊராட்சியில் வேளாண் விரிவாக்க மையம் அமைவுள்ள இடத்தினையும், வழுக்கம்பாறை ஊராட்சியில் வசித்துவரும் பழங்குடியின மக்களுக்காக பட்டா வழங்குவதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்தினையும் மற்றும் செஞ்சி பேரூராட்சி சந்தைமேடு பகுதியில் வசிக்கும் தூய்மைப்பபணியாளர்களுக்கு பட்டா வழங்குவதற்காக குடியிருப்பு பகுதியில் மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதனை தொடர்ந்து விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.23.57 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக ஊராட்சி ஒன்றிய அலுவலகம் கட்டடம் கட்டும் பணியினை மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.

தொடர்ந்து ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பிரதம மந்திரி அவாஸ் யோஜனா 2021 – 2022 திட்டத்தின்கீழ் 69 பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கான ஆணையினை மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள் வழங்கினார்.

பிரதம மந்திரி அவாஸ் யோஜனா திட்டத்தின்கீழ் வீடு கட்டுவதற்கான ஆணையினை வழங்கி மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள் பேசியதாவது :-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்றதிலிருந்து பொதுமக்கள் பயனடையும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அதன் தொடர்ச்சியாக ஊரகப்பகுதிகளில் வீடுகளற்ற ஏழை எளிய மக்கள் அனைவருக்கும் வீடு வழங்கப்பட வேண்டும் எனவும், வீட்டுமனைப்பட்டா இல்லாதவர்ளுக்கு வீட்டுமனைப்பட்டா மற்றும் ஏனைய அனைத்து அரசு நலத்திட்ட உதவிகளையும் சென்றடைய வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியத்திற்குட்பட்ட 1455 நபர்கள் பிரதம மந்திரி அவாஸ் யோஜனா திட்டத்தின்கீழ் வீடு வழங்க வேண்டி விண்ணப்பித்துள்ளனர். முதற்கட்டமாக 461 நபர்களின் விண்ணப்பங்கள் முறையாக பரிசீலிக்கப்பட்டு வீடுகள் வழங்குவதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அதன்படி இன்றைய தினம் 69 நபர்களுக்கு பிரதம அவாஸ் யோஜனா திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டுதவதற்கான ஆணை வழங்கப்பட்டுள்ளது.

வீடு வழங்க வேண்டி விண்ணப்பித்தவர்களின் மனுக்கள் மீது பரிசீலனை மேற்கொள்ளப்பட்டு அனைவருக்கும் வீடு வழங்கப்படும். மேலும். விண்ணப்பித்த அனைவருக்கும் எந்தவொரு செலவும் இல்லாமல் வீடுகள் கட்டுவதற்கான ஆணை வழங்கப்படும். மேலும், முதியோர் ஓய்வூதியத்தொகை கோரியவர்களின் மனுக்கள் மீது பரிசீலனை மேற்கொள்ளப்பட்டு உடனடியாக முதியோர் ஓய்வூதியம் வழங்கப்படும் என மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து மேல்மலையனூர் ஊராட்சியில் நூலகம் அமைக்க இடம் தேர்வு செய்யவும் மற்றும் சமத்துவபுரம் அமைப்பதற்கான இடம் தேர்வு செய்யவும் மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த நிகழ்ச்சிகளின் போது மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.மோகன்.இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஆர்.சங்கர், திண்டிவனம் உதவி ஆட்சியர் திரு.எம்.பி.அமித்.இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர்/செயல் அலுவலர் திரு.க.ராமு, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.பொற்கொடி, ஊரக வளர்ச்சித்துறை செயற்பொறியாளர் திருமதி.வெண்ணிலா, செஞ்சி ஒன்றிய குழு தலைவர் திரு.விஜயகுமார், ஒன்றிய குழு துணைத்தலைவர் திரு.வ.ஜெயபாலன், மேல்மலையனூர் ஒன்றிய குழு தலைவர் திருமதி.கண்மனி நெடுஞ்செழியன், ஒன்றிய குழு துணைத்தலைவர் திருமதி.ஜெயலட்சுமி, மாவட்ட கவுன்சிலர்கள் திருமதி.செல்வி இராம சரவணன், திரு.அரங்க ஏழுமலை, திருமதி.அகிலா பார்த்திபன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விழுப்புரம்.